

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 29-07-2023


# அண்ணல் அம்பேத்கரும் அரசின் சாதனையும்!

நீதிமன்றங்களில் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படக் கூடாது என்ற தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது தமிழ்நாடு அரசின் அழுத்தத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

நீதிமன்றங்களில் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படும் என்ற செய்தி பரவியது. இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாகக் கண்டித்தார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் கண்டனம் தெரிவித்தன. கண்டிப்பதோடு கடமை முடிந்து விடுவதாக முதலமைச்சர் அவர்கள் நினைக்கவில்லை. உடனடியாக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதிக்கு ஒரு உத்தரவை முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்தார்கள்.

முதலமைச்சர் கேட்டுக் கொண்டதன்படி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி நீதியரசர் சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலா அவர்களைத் தமிழ்நாடு அரசின் சட்ட அமைச்சர் சந்தித்தார். 'நீதிமன்றங்களில் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படக்கூடாது' என்ற தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கடிதமாகவே நீதியரசரிடம் வழங்கினார். தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்த தலைமை நீதிபதி அவர்கள், 'நீதிமன்றங்களில் எந்தத் தலைவர்களின் புகைப் படத்தையும் அகற்ற உத்தரவிடப்படவில்லை. தற்போது உள்ள நடைமுறையே தொடரும் (Status Quo to be continued)' என்று தெரிவித்தார். இத்தகவல் வழக்கறிஞர் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் அரசின் அமைதியான சாதனைகளில் இதுவும் ஒன்று.

தந்தை பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும், அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் அறிவித்தது கழக அரசு. இவர்கள் இருவரது சிந்தனைகளையும் அரசின் சார்பில் வெளியிட நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகளை முடுக்கி விட்டுள்ள அரசு திராவிட மாடல் அரசு ஆகும்.

★ "டாக்டர் அம்பேத்கருக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது" என்று சொன்னவர் தந்தை பெரியார். அய்யா அவர்கள் இந்தளவுக்கு எந்தத் தலைவரையும் உயர்த்திச் சொன்னது இல்லை.

"நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்து எங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும்" என்று சிலர் அம்பேத்கரை அழைத்த போது, "உங்களுக்குத்தான் பெரியார் ராமசாமி இருக்கிறாரே? அவரை வைத்து இயக்கம் நடத்துங்கள்' என்றவர் அம்பேத்கர் அவர்கள். தந்தை பெரியார் அவர்கள்தான் 1929ஆம் ஆண்டு முதல் அம்பேத்கரைப் பற்றி தனது இதழில் எழுதி இருக்கிறார். அண்ணலின் உரையை 'சாதியை ஒழிக்க வழி' என்ற புத்தகமாக 1936 ஆம் ஆண்டே வெளியிட்டார்கள்.

இந்தியா முழுமைக்குமான இயக்கத்தை கட்ட வேண்டும் என்பதற்காக மும்பை சென்று அம்பேத்கரைச் சந்தித்தவர் பெரியார். அப்போது உடன் சென்றவர் பேரறிஞர் அண்ணா. எனவே பெரியார் இயக்கத்துக்கும் அம்பேத்கர் இயக்கத்துக்குமான நட்பு என்பது காலம் காலமாகத் தொடரும் நட்பு ஆகும். இந்தக் கொள்கையை வலியுறுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தீட்டிய 'ஒரே ரத்தம்' திரைப்படத்தில் நந்தகுமாராக நடித்தவர் தான் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

**1946ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் மதுரையில் தேவேந்திர குல வேளாளர் சங்கம் சார்பில் நடந்த மாநாட்டில் அம்பேத்கர் அவர்கள் கலந்து கொண்டார்கள். தேக்கம்பட்டி பாலசுந்தரராசு அவர்களின் அழைப்பை ஏற்று கலந்து கொண்டார். அப்போது அம்பேத்கர் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு தரப்பட்டது. அந்த வரவேற்பைக் கொடுத்தவர்கள் திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களான பட்டிவீரன்பட்டி சௌந்தரபாண்டியனார் அவர்களும், பி.டி.ராஜன் அவர்களும். மதுரை எட்வர்டு அரங்கில் அண்ணல் அவர்கள் உரையாற்றினார்கள். 'ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான களம் தமிழ்நாடு' என்று அப்போது அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய களமாக இன்று வரை தமிழ்நாடு இருக்கிறது. அத்தகைய களமாக தமிழ்நாட்டை வைத்திருக்கும் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.**

அண்ணல் அம்பேத்கரின் பெயரை மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு வைக்க முயற்சிகள் மேற்கொண்ட போது அங்கே சிலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அந்த மாநில அரசு அதனை கிடப்பில் போட்டது. வன்முறைகள் ஏற்பட்டன. அம்பேத்கர் அவர்கள் பிறந்த மராட்டிய மாநிலத்தில் இந்த நிலைமை இருந்தது. மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று தமிழ்நாட்டில் இருந்து தந்தி அனுப்ப வேண்டும் என்று கட்டளையிட்டார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். பல்லாயிரக்கணக்கான தந்திகள் போனது. அந்த மாநில ஆளுநராக இருந்த அலெக்சாண்டர் அவர்களும் முதலமைச்சர் சரத்பவார் அவர்களும் கலைஞருக்கு பதில் அனுப்பினார்கள். "அம்பேத்கர் பெயரைச் சூட்டுவோம்" என்று அறிவித்தார்கள். இதனை நாம் செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்த கலைஞர் அவர்கள், 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும், சென்னை சட்டக் கல்லூரிக்கு, "டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி" என்று பெயர் சூட்டினார். 1997 ஆம் ஆண்டு சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் உருவாக்கிய வரும் கலைஞர்தான்.

மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் கூட்டம் நடந்தது. அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதியை 'சமத்துவ நாள்' என்று கொண்டாட வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. உடனடியாக, மறுநாளே இதற்கான அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் செய்தார்கள்.

★ அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அண்ணலுடைய முழு அளவு வெண்கலச்சிலை நிறுவப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல். திருமாவளவன் முன்வைத்தார். இந்தக் கோரிக்கையையும் ஏற்று அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபத்தில் முழுஉருவ வெண்கலச்சிலை நிறுவப்பட்டு விட்டது. அதனை முதலமைச்சர் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அவர்கள், அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை தமிழில் வாசிக்க வாய்ப்பாக மொழிபெயர்த்துப் புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு "தமிழக அரசால் அண்ணலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம் பதிப்பாக தமிழில் வெளியிடப்படும்" என்று அறிவிப்புச் செய்துள்ளார் முதலமைச்சர்.

**பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் உருவாக்கிய ஒரே ரத்தம் என்ற கொள்கை உணர்வுதான் இந்த திராவிட மாடல் ஆட்சியை வழிநடத்துகிறது. இவைதான் முதலமைச்சரை வழிநடத்துகிறது. அதனால்தான் நேரடியாக சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியைப் போய், அமைச்சரை அனுப்பி பார்க்க வைக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அண்ணலுக்குத் தடை என்று அறிவிக்கப்பட்ட இரண்டு நாளில், தடையில்லை என்பதைச் சொல்ல வைக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர். இவை வரலாற்றில் பதிவாக வேண்டிய சாதனையாகும்.**

●●

### பா.ஜ.க.வினருக்கு கசப்பை ஏற்படுத்தியுள்ள

# 'INDIA' என்ற பெயர் வெற்றிக்குக் கட்டியம் கூறிவிட்டது!

## கழகத் தலைவருக்கு - இனமானப் பேராசிரியர் புதல்வர் அன்புச்செல்வன் கடிதம்!



அன்புச் சகோதரர் - தலைவர் - முதல்வர் ஸ்டாலின் அவர்களே,

இனிய வணக்கம்,

இன்றைக்கு (26/07/2023), கழக வரலாற்றில் திருப்புமுனைகள் ஏற்படுத்திய திருச்சி மாநகரில், டெல்டா மாவட்ட பாக முகவர்கள் கூட்டத்தில் தாங்கள் ஆற்றிய உரையில் கனல் தெறித்தது.

எதிரெதிராக இருந்த ஜனநாயக சக்திகளை ஓர் அணியில் திரட்டி 'INDIA' என்று இந்த வெற்றிக் கூட்டணிக்குப் பெயர் சூட்டியது, நமது அணியின் வெற்றிக்குக் கட்டியம் கூறிவிட்டது.

இக்கூட்டணிஅமைய தாங்கள் உழைத்ததன் பலன் பெங்களூருவில் தெரிந்தது.

**கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் பா.ஜ.க.வை ஆட்சியிலிருந்து அகற்றுவது என்ற ஒற்றைப் புள்ளியில் இணைவது ஆகியவை பா.ஜ.க.வினருக்கு கசப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் எதிரொலிதான்; INDIA என்ற பெயரை காட்டமாக பிரதமர் மோடி விமர்சித்தது. இதுவே கூட்டணியின் வெற்றியாகும்.**

2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் நமது தோழர்கள் ஆற்ற வேண்டிய பணியினை விவரித்ததும், அவர்களை ஊக்கப்படுத்தியதும் காலத்தின் தேவையான ஒன்று.

தேர்தல் களத்தைப் பற்றியும் இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மாற வேண்டியதன் அவசியத்தையும் தாங்கள் எடுத்துரைத்த பாங்கு மிக அருமை.

நாட்டின் நலனில் தாங்கள் கொண்டுள்ள அக்கறையும், 40/40 க்கு தொகுதிகளில் நமது அணி வெற்றி பெற வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தியது மிகவும் முக்கியமானது.

கழகத்தவர்களும், பாக முகவர்களும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி, எதிரணியினரின் பொய்களையும், புரட்டுகளையும் எதிர்கொள்ள வேண்டும். நமது பதிவுகளால் பொதுமக்களுக்கு உண்மையையும், கொள்கை விளக்கங்களையும் கழகத்தவர் பதிவிட தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியது சிறப்பாக அமைந்தது.

**'வாரிசுகளின் கட்சி' என்ற குற்றச்சாட்டுக்கு; "ஆம். நாங்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசுகள்" என்று தாங்கள் தந்த பதிலடி தரமான ஒன்றாகும்.**

**தமிழின் நலம், தமிழரின் நலம் மற்றும் தமிழ்நாட்டின் நலனுக்காக அயராது உழைக்கும் தங்களுக்கு என்றென்றும் வெற்றிதான்.**

**நாளையும் நமதே! நாற்பதும் நமதே!**

**வாழ்க தங்களின் நற்றமிழர் மற்றும் கழகத் தொண்டு! வளர்க தங்களின் புகழ்!**

நட்புடன்,

**அ.அன்புச்செல்வன்.**

27.07.2023



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.07.2023) தஞ்சாவூரில் நடைபெற்ற விழாவில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாநகராட்சியில் 133 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாநாட்டு மையக் கட்டடம், ஆம்னி பேருந்து நிலையம், சூரியஒளி மின்நிலையம், மேம்படுத்தப்பட்ட குளங்கள், புதிய பூங்கா, வணிக வளாகம், மருத்துவமனைகளில் நோயாளிகளுடன் உடனிருப்போர் தங்குமிடங்கள் போன்ற கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், துரை.சந்திரசேகரன், துணை மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் கே.சரவணகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சியில் - வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 'வேளாண் சங்கமம் - 2023'

# விவசாயிகளுக்கு 50 ஆயிரம் கூடுதல் இலவச மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜூலை 29-

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற 'வேளாண் சங்கமம்' 2023 விழாவில் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.7.2023) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற, 'வேளாண் சங்கமம் 2023' விழாவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 12 விவசாயி களுக்கு புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று எரிசக்தி துறையின் 2021 - 2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.09.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் சார்பில் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, எரிசக்தித் துறையின் 2022-23ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், கூடுதலாக, 50,000 எண்ணிக்கையில் புதிய விவசாய இலவச மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.11. 2022 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், விவசாயிகளுக்கு 50, 000 கூடுதல் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, கூடுதலாக 50,000 இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டது.

விவசாயிகளின் நலனை எப்பொழுதுமே முதன்மையாகக் கருதக்கூடிய மக்களுக்கான இவ்வரசு, கூடுதலாக 50,000 புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2023-24ஆம் ஆண்டு எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற் கிணங்க, விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை திருச்சிராப்பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேளாண் சங்கமம் விழாவில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், திருச்சி ராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். இனிகோ இருதயராஜ், அ.சௌந்தரபாண்டியன், செ. ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, பி.அப்துல் சமது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதல்வர்

# உத்தவ் தாக்கரே பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஜூலை 29 - மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே அவர்களின் பிறந்தநாளை யொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

உத்தவ் தாக்கரே அவர்களுக்கு எனது மனமார்ந்த மற்றும் இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள். நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட நாட்கள் வாழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.